மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 30/2025**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அசோக்சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : ராஜேஸ்வரி (வா.சா.1)<br>த/பெ.க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

25.11.2025

**முதல் விசாரணை –**

நான் அசல் வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை கூடுதல் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1. 24.11.2008ம் தேதியிட்ட வாதியின் தாயார் அழகம்மாள் இறப்புச்சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வாசாஆ1** ஆகும்.

2. 20.08.2014ம் தேதியிட்ட வாதியின் தகப்பனார் அழகு என்பவரின் இறப்புச்சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வாசாஆ2** ஆகும்.

3. 07.03.2022ம் தேதியிட்ட வாதிக்குஅவரது உடன் பிறந்தவர்களான வள்ளி , முத்துராமலிங்கம்,வேலுச்சாமி எழுதிக் கொடுத்த பாக பாத்திய விடுதலை பத்திரம் SRO நகல் **வாசாஆ3** ஆகும்.

4. 12.04.2022ம் தேதியிட்ட வாதியின் பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் **வாசாஆ4** ஆகும்.

5. 12.04.2022ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு வாதியின் பெயரில் உள்ள பட்டா எண்.930க்குரிய 10(1) நகல் **வாசாஆ5** ஆகும்.

6. 28.01.2020ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி தாவா சொத்திற்கு 01.01.1987ம் தேதி முதல் 27.01.2020 வரையிலான காலத்திற்கு வில்லங்க சான்று இணையதளநகல் **வாசாஆ6** ஆகும்

7. 11.08.2023ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு 01.01.1975ம் தேதி முதல் 10.08.2023வரையிலான காலத்திற்கு வில்லங்க சான்று இணையதளநகல் **வாசாஆ7** ஆகும்.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)